Registered as a Newspaper
பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 131

வெள்ளிக்கிழமை
05 ஏப்ரல் 2024

பங்குனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி!



"இஞ்ச தமிழரசுக் கட்சி மாதிரி அங்க சுதந்திரக்கட்சியும் வழக்கெண்டு அலையப்போகுது போல"

முழங்காவிலில் உள்ள

# துயிலுமில்ல வளைவால் எந்தப் பாதிப்பும் இல்லை

- சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆதாரங்களோடு வாதம்
- மே 16 ஆம் திகதி பிரதேசசபைச் செயலிடம் வாக்குமூலம்
- சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கேட்க நீதிமன்றம் முடிவு

கிளிநொச்சி, ஏப்ரல் 5

நாடெங்கும் போர் நினைவுச் சின்னங்கள் இருக்கையில், முழங்காவில் மாவீரர் துயிலுமில்ல வளைவால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை என்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் அனைவரும் ஒன்றிணைந்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

11

கொக்குத்தொடுவாய்

## புதைகுழி அகழ்வுக்கு நிதி கிடைக்கவில்லை

### மே 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஏப். 5

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி இன்னமும் கிடைக்கவில்லை என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வழக்கு மே மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

11

விளையாட்டுப்போட்டியில் காந்தள் மலர்;

## மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அழைப்பாணை!

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் மேற்கொள்ளப் பட்டிருந்த இல்ல அலங்காரத்துக்காக, அதிபர் மற்றும் ஆசிரியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்குமாறு தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

11

## பிள்ளையார் ஆலயக் காணியில் புத்தர்சிலை வைக்க முயற்சி!

திருகோணமலை, ஏப். 5

திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலயக் காணியில், தமிழ் மக்களின் எதிர்ப்பை மீறிய வகையில் புத்தர்சிலை வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் அந்தப் பகுதியில் நேற்றுப் பரபரப்பு ஏற்பட்டது.

நகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை உட்பட எவ்வித அரச திணைக்களங்களினுடைய அனுமதியும் பெறப்படாமல் சட்ட விரோதமான முறையில் குறித்த கட்டுமானப்பணிகள் இடம்

11

## கத்திக்குத்தில் ஒருவர் இறப்பு

கிளிநொச்சி, ஏப். 5

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கத்திக்குத்துக்கு இலக்கான இளம் குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

11

## சு.க.வின் தலைமைப்பதவி; மீண்டும் சந்திரிகாவுக்கு?



கொழும்பு, ஏப். 5

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைக் குறிவைத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா புதிய வியூகமொன்றை வகுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு எதிராக சந்திரிகாவால் கொழும்புமேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட

11

## விசாரணை!

கொழும்பு, ஏப். 5

இடமாற்றங்களின்போது அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அலுவலர்கள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு

11

## அனலைதீவில் நேற்று காற்றாலைக்கு பூஜை

யாழ்ப்பாணம், ஏப். 5

அனலைதீவுப் பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலைக்கான 'பூமி பூஜை' நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை - இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய, இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தக் காற்றாலை அமைக்கப்பட

11

## இந்திய மீனவர்கள் 24 பேர் விடுதலை!

ஒருவருக்குச் சிறை

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த மாதம் 21ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களில் 24 மீனவர்கள்

11

## நித்திரைக்குச் சென்றவர் மயங்கிய நிலையில் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 5

நித்திரைக்குச் சென்றவர், மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். செபமாலை செல்வராசா (வயது-45) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மேற்படி நபர் கடந்த 31ஆம் திகதி மாலை நித்திரைக்குச் சென்றுள்ளார். மறுநாள் காலை 7 மணியானபோதிலும் அவர் நித்திரையில் இருந்து எழவில்லை. பரிசோதித்துப் பார்த்தபோது மயக்கமுற்ற நிலையில் அவர்

11

## தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு திருமலையில் இன்று விசாரணை!

யாழ்ப்பாணம், ஏப். 5

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை ஆட்சேபித்து திருகோணமலை நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு, எம்.ஏ.சுமந்திரனின் நிலைப்பாட்டை அறிவதற்காக ஏப்ரல் 5ஆம் திகதியான இன்றுவரை ஒத்திவைக்கப்பட்ட நிலையில், இன்றையதினம் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

ஜனவரி 21மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச் செய்யக்கோரி, திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரால்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்சிக்கான திட்டம் பிசகினால் நெருக்கடிக்குள் தள்ளப்படுவோம்

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப்.5

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் இடம்பெற்றாலும் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். எதிர்காலமும் கேள்விக் குறியாகும்.**

- இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான பணியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொண்ட பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி கிடைப்பதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. கடன் மறுசீரமைப்புக் குறித்தும் ஆராயப்பட்டது. தற்போது நாடு சுமுகமான பொருளாதார நிலையை அடைந்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக அரச வரவு- செலவுத் திட்டத்தின் முதன்மைக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வேலைத்திட்டம் கடுகளவு பிசகினாலும் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்- என்றார். (ச-இ)

# ஜெரோமுக்கு தடைநீக்கம்

கொழும்பு, ஏப்.5

பௌத்தம் மற்றும் ஏனைய மதங்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்கி கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி ஜூன் 26 ஆம் திகதி வரை பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் எதிர்வரும் காலங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)



# நீதிமன்றுக்கு விளக்கம் என்னால் தரமுடியாது

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு தாம் வழங்கிய கருத்துகள் தொடர்பில் நீதிமன்றில் விளக்கமளிக்க வேண்டிய அவசியமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

தனது சட்ட ஆலோசகர் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் அவர் இதனை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரியப்படுத்தியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான கருத்துகள் தொடர்பில் வேறு அறிக்கையை வழங்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மைத்திரியின் ஈஸ்டர் தாக்குதல் குறித்த வாக்குமூலம் தொடர்பில் நேற்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்குமாறு மாளிகாகந்த நீதிவான் கடந்த மாதம் அவருக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஐ.ம.ச. கூட்டணி உடன்படிக்கை இன்று

கொழும்பு, ஏப்.5

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி பரந்துபட்ட கூட்டணியொன்றைக் கட்டியெழுப்ப உள்ளது என்றும், அதற்கான உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்படவுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார். (எ-44)

# பெரமுன எம்.பி. நந்தசேன மறைவு

கொழும்பு, ஏப். 5

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. எச். நந்தசேன தனது 69 ஆவது வயதில் நேற்றுக் காலமாகியுள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் அவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று மருத்துவமனை தெரிவித்துள்ளது. இவர் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் முதன் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். (ச-இ)

# போதை மாத்திரையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 5

பாணந்துறை ஹிரணைப் பகுதியில் பெருந்தொகையான போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சாவை வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் 76 ஆயிரத்து 796 போதைமாத்திரைகள் மற்றும் ஒரு கிலோ கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# போலி மருத்துவர்கள் வலைவீச்சு ஆரம்பம்

கொழும்பு, ஏப். 5

நாட்டில் போலி மருத்துவர்கள் மற்றும் போலி மருத்துவ நிலையங்கள் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொண்டு சட்டநடவடிக்கைக்குட்படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மருத்துவர்கள் மருத்துவ சபையில் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் மாகாண மட்டத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்படாத மருத்துவர் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# பின்னடைவுகளுடன் மலையக மக்கள்

## ம.உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 5

நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பல்வேறு துறைகளிலும் மலையக சமூகம் பின்தங்கிய நிலையில் உள்ளது. அவர்களை தேசிய ரீதியில் மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயும் செயற்றிட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் ரி.தனராஜ் தெரிவித்துள்ளார். நாட்டின் ஏனைய சமூகங்களுக்கும், மலையக சமூகத்துக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகிறது. கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் தேசிய ரீதியில் 97 சதவீதமாகக் காணப்படும் எழுத்தறிவு வீதம், மலையகத்தில் 85 சதவீதமாகக் காணப்படுகிறது.

வறுமைமட்டமானது தேசிய ரீதியில் 4 சதவீதமாக உள்ள போதிலும் மலையகத்தில் 9 சதவீதம் எனும் உயர்மட்டத்தில் பதிவாகியிருக்கிறது.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை தேசிய ரீதியில் 6 சதவீதமாகக் காணப்படுகின்ற போதிலும், மலையகத்தில் ஒரு சதவீதமாத மாத்திரமே காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# தேசிய ம.சக்திக்குள் வெட்டுக்குத்து இல்லை!

## ஹரினி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

எனக்கு ஜனாதிபதியாகும் ஆசை இல்லை, அதற்கான தகுதியில்லை எனவும் கூறமுடியாது. எல்லாவிதத்திலும் தகுதியான ஒருவரை எமது அணி ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்குள் ஜனாதிபதியாகும் கனவுடன் ஹரினி இருக்கிறார் எனவும், அதனால் அவருக்கு கட்சிக்குள் வெட்டு விழுகின்றது என்றும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தேசிய மக்கள் சக்திக்குள் எனக்கு எவ்வித வெட்டும் இல்லை. அவ்வாறானதொரு நிலை கட்சிக்குள் இல்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கச்சதீவு விடயத்தில் பேச எதுவுமில்லை!

அலி சப்ரி தடாலடி

கொழும்பு, ஏப்.5

**கச்சதீவை மீளப்பெறுவது தொடர்பில் இந்தியாவில் கருத்தாடல் இடம்பெறவில்லை. கச்சதீவுப் பிரச்சினை இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னரே தீர்க்கப்பட்டுவிட்டது. அதுபற்றி தற்போது மீண்டும் கலந்துரையாடல் அவசியம் இல்லை.**

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கச்சதீவு விவகாரம் பேசு பொருளாக மாறியுள்ளது. கச்சதீவு விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கச்சதீவை மீட்பது தொடர்பில் கருத்தாடல் இடம்பெறவில்லை. கச்சதீவை வழங்கியது தொடர்பில் யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பது அந்த நாட்டில் (இந்தியாவில்) உள்ளக அரசியல் களத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இதன்போது கச்சதீவை மீளப் பெறுவது தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்படவில்லை.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டு தீர்க்கப்பட்ட பிரச்சினையாகும். எனவே, அது தொடர்பில் மீண்டும் கலந்துரையாடல் அவசியம் இல்லை - என்றார். (எ-44)

## பொலிஸ் தடுப்பில் 24 பேர் உயிரிழப்பு



கொழும்பு, ஏப்.5

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது 24 பேர் கடந்த வருடத்தில் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் 'யுக்திய' நடவடிக்கையின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் 44 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பாலின வேதன இடைவெளி; இலங்கையில் கடும் உயர்வு

கொழும்பு, ஏப். 5

உலகளாவிய ரீதியில் நிலவும் பாலின அடிப்படையிலான வேதன இடைவெளியானது சராசரியாக 20 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேதன இடைவெளி உலகளாவிய சராசரியை விடவும் அதிகமாக பதிவாகியுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புதிய ஆய்வறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பாலின அடிப்படையிலான வேதன இடைவெளி தசாப்தங்களுக்கும் மேலாக நீடிப்பதைக் காண்பிக்கின்றது. இலங்கையின் தொழிற்படையில் ஆண்களின் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் பெண்களின் பங்களிப்பு மிகக்குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டுதரவுகளின்படி பெண் தொழிலாளர்களுக்கு ஒரு மணிநேரத்துக்கு வழங்கப்படும் வேதனமானது, ஆண்களுக்கு வழங்கப்படும் வேதனத்திலும் பார்க்க 27 சதவீதம் குறைவானதாகக் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## போதையுடன் இருவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஏப்.5

கட்டுநாயக்க பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 7 போதைமாத்திரைகளும் மற்றையவரிடமிருந்து, 550 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன என கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## விஸா இல்லாத பிரவேசம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்ட ஏழு நாடுகளிலிருந்து வரும் உல்லாசப்பயணிகளுக்கு, விஸா இல்லாமல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று உல்லாசப்பயணத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, ஜப்பான், தாய்லாந்து, இந்தோனேஷியா, ரஷ்யா மலேசியா ஆகிய நாடுகளைச்சேர்ந்த உல்லாசப் பயணிகளுக்கே இந்தச் சலுகை வழங்கப்பட்டிருந்தது. (எ-6)

# ஐ.எம்.எப். விருப்பத்துக்கு தேர்தல் நடத்த முடியாது!

சரித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.5

சர்வதேச நாணயநிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசமைப்பு இயற்றப்படவில்லை. அரசமைப்பின்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் செயற்றிட்ட நடவடிக்கைகள் நிறைவுறும்வரையில் எந்தத் தேர்தலும் நடத்தப்படாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. தேர்தலுக்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் ஜூலை மாதம் முன்னெடுக்கும். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஊடாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடத்தீர்மானித்துள்ளோம் - என்றார். (எ-இ)



# தினம் தெரியுமோ?

'ஆலையைத் திறக்க ஆயிரம் பாடு. திறந்து வைச்சால் அவையின்ர பாடு' எண்டு பழசுகள் புறுபுறுக்கிறதைக் கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடிச் சொல்லுறது இண்டைக்கும் அச்சொட்டாப் பொருத்தமாத்தான் இருக்குது. அதுக்கு நல்ல உதாரணம் பலாலி எயார்போர்ட். அதைத் திறக்கிறதுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு எள்ளளவும் மனமில்லை. இந்தியாவும், யாழ்ப்பாண ஆக்களும் கடும் பிரஷர் குடுத்தபடியாத்தான், அரைமனதோட அரைகுறை வேலையளோட பலாலி எயார்போட்டை அரசாங்கம் திறந்தது. அப்பிடி படாத பாடுபட்டு பலாலி எயார்போட்டை இயங்க வைச்சால், அதுக்குள்ள ஆயிரம் ரூல்ஸ்களை புதுசாப் போட்டு சனத்தை சிப்பிலியாட்டுற வேலையை மட்டும் சிறப்பாச் செய்யினமாம் எங்கட கஸ்டம்ஸ் அதிகாரிமார்.

கிட்டடியில இந்தியா போட்டு பிளேனில பலாலியில வந்திறங்கிய சிலர், உளுந்து, கடலை, பயறு எண்டு கொஞ்சச் சாமானைத் தங்கட தேவைக்காகக் கொண்டந்திருக்கினம். ஆகமிஞ்சிப் போனால் அஞ்சாறு கிலோவும் வராது. ஆனால் உளுந்து, பயறு இறக்குமதிக்குத் தடை எண்டு காரணம் சொல்லி, அவை தங்கட வீட்டுத் தேவைக்காக கொண்டந்த சாமானைக் கூட, 'இறக்குமதி' எண்ட லேபிள் குத்தி, கஸ்டம்ஸ் ஒப்பீஸர்மார் வெளியில கொண்டுபோக ஏலாது எண்டு மறிச்சுப்போட்டினம். பிளேனில வந்தவையும் "40 ஆயிரம் சிலவழிச்சு, 4 கிலோ உளுந்தைக் கொண்டாறதுக்குப் பேரோ இறக்குமதி? எது இறக்குமதி எண்டு தெரியாதோ?" எண்டெல்லாம் கேட்டும், அதிகாரிமார் அசைஞ்சும் குடுக்கேலை. கடைசியில அங்கேயே அந்த உளுந்து, பயறு, கடலையெல்லாம் போட்டிட்டு வந்திட்டினமாம்.

இதுக்குப் பிறகு இப்ப ஒரு நாலைஞ்சு நாளைக்குப் பிறகும் இன்னொரு கூத்து நடந்திருக்கு. இந்தியாவுக்குப் போன ஒருத்தர் தன்ர கலியாணத்துக்கு எண்டு இந்தியாவில ஒரு வடிவான பூமாலையைக் கட்டுவிச்சு, தான் வரேக்க பிளேனில கொண்டந்திருக்கிறார். அந்த மாலையும் எங்கட கஸ்டம்ஸ்காரர் கண்ணில எத்துப்பட்டிட்டுது. விடுவினமோ அவை? ஏதோ அனுகுண்டைக் கண்டமாதிரி விழுந்தடிச்சு அந்த மாலையைப் பிடுங்கிவைச்சுக்கொண்டு விண்ணானம் கதைச்சிருக்கினம். "இப்பிடி மாலையெல்லாம் கொண்டு வாறதுக்கு அனுமதி இல்லை. அப்பிடிக் கொண்டுவரவேணும் எண்டால், மாலையை மூண்டுநாள் கொரண்டைன் (தனிமைப்படுத்தல்) பண்ணி, அதால கிருமி ஒண்டும் தொத்தாது எண்டு உறுதிப்படுத்திப் போட்டுத்தான் கொண்டரலாம் எண்டு வாய்க்கு வந்த ரூல்ஸை எல்லாம் அடிச்சுவிட்டிருக்கினம். மாலையைக் கொண்டு வந்தவரும் கனநேரமா வாதாடிப் பார்த்தார். கஸ்டம்ஸ்காரர் இளகிறதாத் தெரியேலை. மாலைக்காக வாதாடிய மணவாளனுக்கு கோபம் உச்சிக்குப் போட்டுது. "இப்ப மாலையைக் கொண்டந்தபடியால தானே உவ்வளவு செட்டுக்காட்டுறியள்? எனக்கு உந்த மாலையே வேண்டாம்" எண்டு கத்திக்கொண்டு, மாலையை அப்பிடியே பிய்ச்சு செறிஞ்சு போட்டு வந்திட்டார். போதைப்பொருள் வாறதையெல்லாம் பிடிக்க வக்கில்லாதவை தங்கட வீரத்தை உளுந்திலையும், மாலையிலையும் தான் காட்டிக் கொண்டிருக்கினம். உப்பிடியான கஸ்டம்ஸ் காரரை வைச்சிருந்தா நாடு உருப்படுறதும் கஷ்டம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் கோரப்பிடிக்குள் இன்னமும் இலங்கை மக்கள்

## உலகவங்கி சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஏப். 5**

**இலங்கையின் பொருளாதாரம் மீண்டெழும் பாதையில் பயணித்தாலும் உயர்வான வறுமை மட்டங்கள், வருமான சமத்துவமின்மை ஆகிய பிரச்சினைகளை இலங்கை முகம் கொடுத்து வருகிறது - என்று உலகவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.**

உலகவங்கியால் இலங்கை அபிவிருத்தி இற்றைப்படுத்தல் மீண்டெழுத லுக்கான பாலம் என்ற தலைப்பின்கீழ்விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அண்மையில் இடம்பெற்றபோதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதுகுறித்து உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பிரான்சிஸ்கா ஓன்சார்ஜ் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பணவீக்கம் குறைந்து வருகிறது. புதிய அரசிறைக்கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்புலத்தில் அதிக வருமானங்கள் ஈட்டப்படுகிறன. 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 2.2 வீதமான வளர்ச்சியை எட்டவுள்ளது. எனினும் உயர்வான வறுமைமட்டங்கள், வருமானசமத்துவமின்மை, தொழில் சந்தை அக்கறைகள் ஆகிய பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுத்து வருவதாக உலகவங்கியின் அண்மைய அரையாண்டு அறிக்கை இற்றைப்படுத்துகின்றது.

2023 ஆம் ஆண்டில் 25.9 வீதமான இலங்கையர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதிக கடன்சேவை கடப்பாடுகள் அரசிறை மிகுதிகளில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. 2026 வரை வறுமை விகிதங்கள் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுத்திய தாக்கத்தை தணிப்பதற்கான உறுதியான கட்டமைப்புசார் வழிமுறைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 5

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்ததாவது:

அனைத்துச் சமயங்களுமே சமூகத்துக்குத் தேவையான விழுமியங் களை, கோட்பாடுகளை, சமுதாய நலன்களை, சமூக நீதியை எடுத்துக் கூறுகின்றன.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்களிடையே இன, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். அதற்கமைய, வடக்கு மாகாணத்திலுள்ள மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், அடுத்தகட்டக் கலந்துரையாடலை விரைவில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்- என்றார். (ஒ-26)

# ‘லைசென்ஸ்’ பெற மாணவர்களுக்கு புதிய முறைமை

கொழும்பு, ஏப். 5

எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றாது சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறை ஒன்று மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி பாடசாலை போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பால் வாகன போக்குவரத்து குறித்த நிபுணத்துவ பதக்கம் வழங்கப்படும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. இவ்வாறு பதக்கம் பெறும் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதியின்போது சலுகை வழங்கப்படும்.

மாணவர்கள் மத்தியில் வீதிப் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# செவ்வாழைச் செய்கை விழா

கிளிநொச்சி, ஏப். 5

வர்த்தக ரீதியான செவ்வாழைச் செய்கை வயல் விழா நிகழ்வு முழங்காவிலில் சிறந்த விவசாய நடைமுறையில் ஈடுபடும் தம்பிப்பிள்ளைசேகர் என்பவரின் 4ஆம் பண்ணைத் தோட்டத்தில், முழங்காவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவின் பகுதி விவசாயப் போதனாசிரியர் மகானந்தம் மகிலன் தலைமையில் இடம்பெற்றது. (ப-113)

# சொற்பொழிவுகள்

‘விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்’ எனும் தொனிப்பொருளில், மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். காரைநகர் இந்துக் கல்லூரியிலும், முற்பகல் 11 மணிக்கு யாழ். காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் தமிழறிஞர் த.சிவகுமாரன் கலந்துகொண்டு விழிப்புணர்வுச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ம-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். வீட்டில் குடும்பத்தினருடன் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். பணவரவு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சி வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். சிவபெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும். துர்கையை வழிபட எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கி யத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கப் பெறலாம்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம். உடல்நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பால் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மீனம்:** புதிய முயற்சிளை தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். கடன் வாங்க நேரிடும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

# நெருக்கடி வரக்கூடாதெனில் ரணிலுக்கே வாய்ப்பளிக்குக

*செஹான் சேமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 5

நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்படாதிருக்க வேண்டுமெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொருமுறை வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த 18 மாதங்களில் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டை மீட்டுவருகின்றார். அதற்கான பணி இன்னும் முடிவடைய வில்லை. எனவே, முன்னோக்கிச் செல்ல இடமளிக்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வளைவில் கண்வைத்த பொலிஸ்!

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவிலில் அப்பிரதேச மக்களால் மாவீரர் துயிலும் இல்ல வாயிலில் அமைக்கப்பட்ட வளைவை அகற்றப் பொலிஸார் தீவிரமாகவிருக்கின்றனர். எவருக்கும் எந்த இடையூறும் இன்றி, தானும் தன்பாடுமாக ஓரமாக இருக்கும் இந்த நுழைவாயில் வளைவு ஆபத்தானது என்று கூறி, நீதிமன்றத்தை நாடியிருக்கின்றது பொலிஸ் தரப்பு. எத்தனையோ சட்டவிரோதக் கட்டடங்கள், பொதுமக்களுக்கு இடையூறான கட்டடங்கள் ஆயிரக்கணக்கில் இந்த நாட்டில் இருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாத பொலிஸார், பிரதேசமக்கள் ஒன்றிணைந்து அமைத்த ஒரு வளைவை அகற்றுவதற்கு வரிந்துகட்டிக் கொண்டு நிற்கின்றனர். தமிழ் மக்களின் உணர்வுகளைச்சீண்டவே பொலிஸாரின் இந்தத்திருவிளையாடல்.

பௌத்த மேலாதிக்கச் சிந்தனையில்-நாட்டின் சிறுபான்மை மக்களின் உரிமைகளை மறுத்த கடந்த கால வரலாற்றுத் தவறுகளின் காரணமாக இலங்கைத் தீவு படுகுழியில் தள்ளப்பட்டது. இலங்கை சிங்கள-பௌத்த நாடு என்கிற பேரினவாத மனப்பாங்குடன் சிறுபான்மை மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள்- சீண்டல்கள் பல தசாப்த போரை உண்டாக்கியது. சிறுபான்மை மக்களுக்கான சுதந்திரத்தை-உரிமைகளை வழங்கமறுத்த அன்றைய பெரும்பான்மையின ஆட்சியாளர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகளே ஆயுதப் போராட்டத்தை நோக்கிச் சிறுபான்மையினரைத் தள்ளின. பல தசாப்தகால அனுபவத்தின் பின்னரும் சிங்கள-பௌத்த மேலாதிக்க மனநிலையில் மாற்றங்கள் தென்படவில்லை. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தசாப்த காலத்துக்கு மேலாகியுள்ள நிலையில் நாட்டின் சிறுபான்மை மக்களான தமிழ் மக்கள் மீதான அழுத்தங்களும்-அடக்குமுறைகளும் இன்னமும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. அரச இயந்திரத்தின் உதவியுடன் சிறுபான்மைத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் புராதன வழிபாட்டிடங்கள், பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்டு பௌத்த மயமாக்கப்படுகின்றன. தமிழ்மக்களின் பண்பாட்டு வாழ்விடங்களையும், கலாசார வழிபாட்டு இடங்களையும், தொன்மை வாய்ந்த இடங்களையும் அழிப்பதற்கான முயற்சிகள் அரச திணைக்களங்களின் அனுசரணையுடன் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன.

இவைபோதாதென்று, தமிழ் மக்களின் மனங்களில் அதியுன்னதமாகப் போற்றப்படும், ஆராதிக்கப்படும் நினைவுகளையும், நினைவுச்சின்னங்களையும் இருந்த இடம்தெரியாமல் சிதைப்பதையும் சிங்கள-பௌத்த பேரினவாதம், தன் கட்டாய நிகழ்ச்சி நிரலாகப் பின்பற்றுகின்றது. இதற்கான ஆகப்பிந்திய உதாரணமே, முழங்காவில் மாவீரர் துயிலுமில்ல வளைவை அகற்றுவதற்கான பொலிஸாரின் எத்தனம். அந்த வளைவால் இதுவரை ஒரு விபத்தேனும் நிகழவில்லை, சிறுமுரண்பாட்டுக்குக்கூட அந்த வளைவு வித்திடவில்லை, எவர் மனதையும் அந்த வளைவு புண்படுத்தவில்லை, எவரது பணத்தையும் அந்த வளைவு பிடுங்கவில்லை. மாறாக மக்களின் மனங்களில் ஆறாமல் இருக்கும் உளக் காயங்களுக்கு ஏதோவொருவகையில் அந்த வளைவும் மருந்திடுகின்றது. இழந்துபோன, தொலைந்துபோன வீரயுகக் காலத்தை இரைமீட்கும் ஒரு கனவை அந்த வளைவு கொடுத்திருந்தது. அந்த அற்பமகிழ்வும் அதிகாரத்துக்குப் பிடிக்கவில்லை. இப்போது 'வளைவால் ஆபத்து' என்று கூக்குரலிடத் தொடங்கியுள்ளது. தமிழ்மக்களைச் சீண்டி, அவர்களின் நிம்மதியைக் கெடுக்கும் கைங்கரியத்தை இப்போது முழங்காவிலிலும் அதிகாரம் ஆரம்பித்துவிட்டது. தமிழ் மக்கள் மீதான இத்தகைய அழுத்தங்கள் -சீண்டல்கள் என்பன மீண்டும் நாட்டைப் பின்னோக்கியே இழுத்துச்செல்லும். தெற்கில் ஊறிப்போயுள்ள பௌத்த மேலாதிக்கச் சிந்தனை களையப்படும் வரையில்-சிறுபான்மை மக்களின் உரிமைகள் கிட்டும்வரையில் இலங்கை ஓர் அங்குலம்கூட முன்னோக்கி நகரமுடியாது. இந்த நிதர்சனத்தை தெற்குத் தலைவர்களும், மக்களும் புரிந்து கொள்ளவேண்டும். நாட்டின் சுபீட்சம் பற்றிப் பேசுவோர் முதலில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள்-சீண்டல்களைத் தடுத்து நிறுத்துங்கள். அதன் பின்னர் பேசலாம் நல்லிணக்கம் பற்றி...!




# விவசாயத்தைப் பலப்படுத்த நவீன மயமாக்கல் சபை!

**கொழும்பு, ஏப். 5**

**விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தில் அரசாங்க நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் விவசாய நவீன மயமாக்கல் சபையொன்று நிறுவப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

விவசாயத் துறையுடன் தொடர்புடைய அமைச்சுகள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை மறுசீரமைப்புச் செய்தல், கண்காணித்தல் உள்ளிட்ட பணிகளை இந்தச் சபை முன்னெடுக்கவுள்ளது.

விவசாயத்தை நவீனமயப்படுத்தி, விவசாய தொழில் துறையை விரிவுபடுத்தி, நாட்டின் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தி வறுமையை ஒழிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(ச-இ)

## பரீட்சைக் கடமைக்கு அதிக கொடுப்பனவு



கொழும்பு, ஏப். 5

பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு, கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பான அறிக்கை கோரப்படும். அந்த அறிக்கையின் அடிப்படையில் எதிர்வரும் மே மாதமளவில் அதிகரித்து வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## 74,499 பேர் வெளிநாடு பயணம்

கொழும்பு, ஏப்.5

கடந்த 3 மாதங்களில் 74 ஆயிரத்து 499 இலங்கையர்கள் தொழில்நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்களில் 34 ஆயிரத்து 599 பேர் பெண்கள் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (எ)

## ஆங்கில ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஏப். 5

நாடளாவிய ரீதியில் உள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் உயர்தொழில்நுட்ப கல்வி டிப்ளோமாவை பூர்த்தி செய்த 500 பேர் ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தேயிலை உற்பத்தி: வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஏப்.5

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக தேயிலை இலைகளின் விளைச்சல் சுமார் 30 வீதமாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வறண்ட காலநிலைக்கு முன்னர் ஒரு ஏக்கருக்கு 200முதல்300கிலோ தேயிலைத் துளிர்கள் கிடைக்கக்கூடியதாக இருந்தது. தற்போது 100 முதல் 150 கிலோ வரை குறைந்துள்ளது என்று தேசிய சிறு தேயிலைத் தோட்டக்காரர்கள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் தெரிவித்தார். (ச-இ)

### நாளை

**06.04.2024**

**சனிக்கிழமை**

**பங்குனி 24**

சுபநேரம் : 03.08 - 04.38

ராகுகாலம் : 09.08 - 10.38

### நாளொரு நல்வார்த்தை

**உண்மைக்கு அகம், புறம், இடைப்பட்ட நிலை என எதுவுமில்லை.**

**– போதி தர்மர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 5

நல்லூர்ப்பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் முன்னெடுக்கும் குருதிக் கொடை நிகழ்வு, நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது. குருதிக்கொடை நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)



பராமரிப்பில்லாது

# மூக்கைப் பொத்தவைக்கும் நாவாந்துறை சந்தை!

## பொதுமக்கள், வியாபாரிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஏப்.5

யாழ். மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட நாவாந்துறை பொதுச்சந்தை போதிய பராமரிப்பு வசதிகள் இன்றி துர்நாற்றத்தோடு காணப்படுகின்றது என்று பிரதேச மக்களும், வியாபாரிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தச் சந்தையில் மரக்கறிகள், இறைச்சி வகைகள், மீன்கள் போன்ற வற்றுக்கான விற்பனை நிலையங்கள் உள்ளன. அதிகளவான மக்கள் இந்தச் சந்தையில் ஒன்றுகூடுகின்றனர்.

ஆயினும் சந்தை போதிய பராமரிப்பின்றிக் காணப்படுகின்றது. சரியான முறையில் சுத்திகரிப்புச் செய்யப்படாமை மற்றும் கழிவகற்றப்படாமையால் அங்கு துர்நாற்றம் வீசுகின்றது. கழிவுகளில் புழுக்கள் உருவாகி விற்பனை நிலையங்களுக்குள்ளும் புகுகின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகரசபைக்குப் பலமுறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வடிகாலமைப்பு, நீர் மற்றும் மலசலகூட வசதிகளையும், உரியமுறையில் கழிவுகளை அகற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-20)

## முக்கொம்பன் வீதியை சீரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.5

பூநகரி முக்கொம்பனில் இருந்து கரைச்சி வன்னேரிக்குளம் செல்லும் வீதியைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று இரு கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தில் 500 குடும்பங்களும், முக்கொம்பன் கிராமத்தில் 700 வரையான குடும்பங்களும் வாழ்கின்றன. இந்த இரு கிராமங்களுக்கும் இடையிலான வீதி பற்றைகளால் மூடப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், வன்னேரிக்குளத்திலிருந்து முக்கொம்பன் வழியாகப் பூநகரி சென்று யாழ்ப்பாணம் வரை மக்கள் பயணிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது, குறித்த வீதி பற்றைகள் மூடி மக்கள் செல்ல முடியாதுள்ளது என்று அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்தனர். இந்த வீதியைப் புனரமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை அதிகாரிகள் விரைவாக மேற்கொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## ஆக்கப்பொருள்கள் விற்பனைச் சந்தை

பளை, ஏப்.5

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சமுர்த்தி சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் ஆக்கப்பொருள்கள் விற்பனைச் சந்தை, பிரதேச செயலக வளாகத்தில் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சமுர்த்தி சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து பயனாளர்களை ஊக்குவிக்கவேண்டும் என்று பிரதேச சமுர்த்தி அலகினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-9)

## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், ஏப். 5

இணுவிலில் கசிப்புடன் இளைஞன் ஒருவனை சுன்னாகம் பொலிஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பைக் கைப்பற்றினர். கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே யிடத்தைச் சேர்ந்த இளைஞனைக்கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குதாக்கல்செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-125)

*** *** ***

யாழ்ப்பாணம், ஏப். 5

வேலணையில் இளைஞர் ஒருவரை கசிப்புடன் ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

வேலணை 7ஆம் வட்டாரத்தில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பைக் கைப்பற்றினர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரானஇளைஞரையும் கைது செய்தனர். (ஒ-125)

## சீனாவின் நகரத்துடன் சீதாவாக்கை இணைப்பு

கொழும்பு, ஏப். 5

சீனாவின் யுனான் மாகாணத்திலுள்ள டிலான் நகரமும் சீதாவாக்கை நகரமும் சகோதர நகரங்களாக இணைக்கப்படவுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன சீனாவுக்கு உத்தியோகபூர்வபயணம்மேற்கொண்டபோதுசீனப்பிரதமருடன் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். இரு நாட்டுக் கூட்டறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் யுனான் மாகாண மருத்துவர்கள் சீதாவாக்கை மருத்துவர்களுக்குப் பயிற்சியளிக்கவுள்ளனர். (ஒ-6)

## அக்கராயன் குளத்தின் கீழ் 3,687 ஏக்கரில் சிறுபோகம்

கிளிநொச்சி, ஏப்.5

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் 3 ஆயிரத்து 687 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. சிறுபோக நெற்செய்கை தொடர்பான கூட்டம் கரைச்சிப் பிரதேச செயலாளர் த. முகுந்தன் தலைமையில், ஸ்கந்தபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ-13)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.5

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கல்லூரியின் மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பெ.வசந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதமவிருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும், ஐக்கிய ராச்சியத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளருமான இ.தழிழரசன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-66)



## களத்தில் விவசாயிகள்; வாய்க்கால்கள் துப்புரவு

இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்காக வவுனிக்குளத்தின் வாய்க்கால்களை துப்புரவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வாய்க்கால்களைத் துப்புரவாக்குமாறு கடந்த 10 ஆண்டுகளாக விவசாயிகள் கோரிவந்த போதும் அதற்கான நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்படவில்லை. அதனால் கடந்த காலங்களில் நீர்ப்பாசன நடவடிக்கைகள் கடும் இடர்களுக்கு மத்தியிலேயே முன்னெடுக்கப்பட்டது.

தற்போது அந்தப் பகுதி விவசாயிகள் ஒன்று திரண்டு தமது முயற்சியில் வவுனிக்குளத்தின் வலது கரை, இடதுகரை பிரதான வாய்க்கால்கள், அணைக்கட்டு வீதிகள் போன்றவற்றைத் துப்புரவு செய்து வருகின்றனர். (எ-13)

## நலன்புரித் திட்ட கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, ஏப்.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளுக்கான மார்ச் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள வங்கிகளில் வழங்கப்பட்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பின்தொடரும் வலி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.5

ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளரான மு.அநாதரட்ச கனின் சிறுகதைத் தொகுதியான 'பின்தொடரும் வலி' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு, அல்வாய், மெதடிஸ்த தேவாலயத்தின் ஆழ்வாப் பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ப)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK-IN-INTERVIEW
## Establishment of Library of Tamilology

A walk in interview for the post of **PROJECT ASSISTANT** on daily paid basis will be held on **16.04.2024 (Tuesday) at 9.30 am** at the Board Room of the University.

**Qualifications:**

I. Should have passed the G.C. E. O/L Examination in at least 06 subjects, including credit passes in Tamil, English Language and Mathematics.

**And**

II. Should have passed the G.C. E. A/L Examination with three credit passes.

**And**

III. Should have completed Diploma in Library and Information Science, Level – I.

**And**

IV. Should have IT literacy, especially in the areas of Electronic mailing, Word and Excel for office environment, Project management platforms.

**Age:** Applications should be less than 40 years of age.

**Salary:** Rs 1701.00 per day will be paid. Candidates are required to appear with relevant certificates, NIC and **self-prepared applications.**

Registrar
04.04.2024

(cr.42152) (N-1)



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.03.1937

மறைவு 17.04.2023

கடந்த 17.04.2023 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் வயிரமுத்து கதிர்காமநாதன்**

(ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தா)

அவர்களின் முதலாம் வருட ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (06.04.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய நாவலடி,
கொடிகாமம்.
077 801 2258

குடும்பத்தினர்.

(CR 42154) S-1



# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக கடந்த 18 வருடங்களாக கடமையாற்றிய

## கைலாசபதி ஜெயகாந்தன்

(உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்)



அவர்கள் 03.04.2024 அன்று சுகவீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆறாத்துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

உத்தியோகத்தர்கள்,
மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலகம்,
வடக்கு மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மை திறனாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 5

புங்குடுதீவு மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, பாட சாலை மைதானத்தில் இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள் ளது.

அதிபர் கி.விநோதன் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தின ராக முல்லைத்தீவு உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் பொன்னம்பலம் சகி லன், சிறப்பு விருந்தினர்க ளாக சூழக அமைப்பு, ஐக்கிய புங்குடுதீவுச் சங்கச் செயலாளர் கருணாகரன் நாவலன், ஜே.ஏ. எஸ்.ஏ.சீ. நிறுவன நிகழ்ச்சித் திட்ட முகா மையா ளர் சுதர்சன் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
மாபிள் பதித்துத்தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்
**077 334 1281**

**வீடு வாடகைக்கு**
71, பலாலி வீதி, புன்னாலைக் கட்டுவன் தெற்கில்
(EUT தளபாட தொழிற்சாலைக்கு அருகில்)
புதிதாக அமைக்கப்பட்ட 3 அறைகளைக்கொண்ட
நவீன வசதிகளுடன் கூடிய
**வீடு வாடகைக்கு உண்டு.**
வாடகைக் கட்டணம் நேரில்
பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS/54599) J-1
**077 131 2987**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**2022 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29 ஆம் நாள்**
**ஜீவப்பிரம்ம ஐக்கியப்பேறு பெற்ற எமது குடும்பத்தின்**
**ஆன்மிக ஒளிவிளக்கு**
**காங்கேய வாகீசர் கலாபூஷணம்**
**சிவத்திரு. வல்லிபுரம் குமாரசாமி ஐயா**
**(ஓய்வுபெற்ற நூலகப் பொறுப்பாளர்)**

ஞான உதயம்
23 . 03 . 1945



பிரம்ம ஐக்கியம்
29 . 03 . 2022

**திதி:- 05.04.2024**

ஞான விளக்காய் நல்லொளி வீசி
நம்மையெல்லாம் நல்லாளாக்கி
நல்லறிவூட்டி தந்தையாய் தாயாய்
தமையனாய் நல்லாசானாய்
குருவாய் எமக்கு வாய்த்து
குவலயம் தன்னில் எம்மை
குணமுடையவராய் வாழவைத்த
எங்கள் குலதெய்வமே

நெற்றியில் நிறைந்த நீற்றுடன்
இசையுடன் பாவம் ஓங்கும்
இனிய சொற்பொழிவாற்றி எமது
சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டதும்
அடியவர்கள் புடைசூழ பல
குருமார்கள் பதம் நாடி
ஆன்மிக வாழ்விற்கு எமக்கு வித்திட்டதும்

ஆலயங்களுக்காய் அயராது உழைத்து
அன்போடு வரும் அடியவர்களுக்கு
அன்னமளித்து
அரிய நூல்கள் பல எழுதி அதனை
அன்போடு எமக்களித்ததும்


பட்டங்கள் பலபெற்றும் பாமரன் போல்
பழகும் உங்கள் பணிவான பாங்கும்
பரம்பொருளே பெரும் பொருளென
பரம பதம் நாடிய உங்கள் பணியையும்
மறக்க முடியாமல் பரிதவிக்கின்றோம்
பாசமுடன் உங்கள் உறவுகள்

**"அருள்பவனம்"**
**சூராவத்தை,**
**சுன்னாகம்.**

(cs 54495 X N-1)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### வைரமுத்து சந்திரராஜ்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**

உடுவில் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 17/2 கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து சந்திரராஜ் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) நேற்று (04.04.2024) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற வைரமுத்து - செல்லமுத்து ஆகியோரின் பாசமிகு சிரேஷ்ட மகனும், நல்லையா - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், செல்வராணி (ஓய்வு நிலை ஆசிரியை - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) அவர்களின் பாச மிகு கணவரும், துளசி (Freelance ஊடகவியலாளர்) மற்றும் அகிலன் (பிராந்திய முகாமையாளர்) ஆகியோரின் அன்பு தந்தையும், அனுஷி சாரங்கா அவர்களின் அன்பு மாமனாரும், றுவின்ராஜ் அவர்களின் அன்பு பேரனும் இரவீந்திரராஜ் புவன லோயினி (வசந்தி), கலானந்தன் (மோகன்) ஆகியோரின் அன்பு சகோதரரும், நல் லையா ஜெயரட்ணம் (ஓய்வு நிலை முகாமையாளர் - இலங்கை வங்கி), காலம்சென்ற ஜெயராணி ரட்ணாயக்க (ஓய்வு நிலை உத்தியோகத்தர்-இலங்கை மத்திய வங்கி), யோகராணி வில்சன் (கனடா), திலகராணி இராஜகுலேந்திரன் (பிரான்ஸ்), ஜெயமோ கன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.04.2024) வெள் ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

*17/2 கச்சேரி நல்லூர் வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**ச.அகிலன் (மகன்)**
**ச.துளசி (மகள்)**
**021 222 7377**

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 11 . 1948



மறைவு
04 . 04 . 2024

### Dr. கணேசபிள்ளை சிவகுருநாதன்

**(ஓய்வுபெற்ற முகாமைத்துவ பீடாதிபதி ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்)**

அறுகம்புலம் காரைநகர் மேற்கை பிறப்பிடமாகவும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கணேசபிள்ளை சிவகுருநாதன் நேற்று (04.04.2024) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், ஹரிகரன், தேஜோமயானந்தா, ஷாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தியானா, மயூரி, ரிசிகேசன் ஆகியோரின் மாமனாரும், ஷியாமளன், அக்ஷயன், ஷாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான ஜெகதாம்பாள், சாரதாதேவி மற்றும் சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2024) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் இல. 12 வைமன் வீதி நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12 வைமன் வீதி,
நல்லூர்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 2108**

(CS/54631) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இமாலய இலக்கை விரட்டிய பஞ்சாப்

## சொந்த மைதானத்தில் குஜராத் தோல்வி

**அஹமதாபாத், ஏப். 5**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் குஜராத் நிர்ணயித்த 200 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிப்பிடித்து வென்றது பஞ்சாப் அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 4 விக்கெட்களை இழந்து 199 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரரான சகா 13 பந்துகளில் 11 ஓட்டங்களுடனும், வில்லியம்சன் 22 பந்துகளில் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் நிதானமாக விளையாடிய அணித்தலைவர் சுப்மன் கில் பெற்ற 89 ஓட்டங்களுடன், தெவெட்டியா இறுதிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடி 8 பந்துகளில் பெற்ற 23 ஓட்டங்களும் குஜராத் அணி இந்த இமாலய இலக்கை அடையக் காரணமாக அமைந்தன.

பந்துவீச்சில் ரபாடா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர் தவான் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பேர்ஸ்டவ், பிரசிம்ரன் சிங் இருவரும் அதிரடியாக விளையாடி பின்னடைவைச் சரிசெய்தனர். 22 (13) ஓட்டங்களுடன் பேர்ஸ்டவும், 35 (24) ஓட்டங்களுடன் பிரசிம்ரன் சிங்கும் ஆட்டமிழந்தாலும் தொடர்ந்து வந்த சஷங் சிங் மற்றும் ஆஷுதோஸ் சர்மா இருவரும் குஜராத்தின் பந்துவீச்சைப் பிரித்து மேய்ந்தனர். ஆஷுதோஸ் சர்மா 31 (17) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், சஷங் சிங் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்று பஞ்சாப் அணியின் வெற்றிக்கு வித்திட்டார். ஒரு பந்து மீதமிருக்கையில் 7 விக்கெட்களை இழந்து வென்றது பஞ்சாப். (ம)



ராஜீவ் காந்தி கொலைவழக்கு

# நடைபிணம்போன்ற வாழ்வு இத்துடனாவது முடியட்டும்

## சிறைமீண்ட உறவுகள் நேற்று உருக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 5

நடைபிணம் போன்று இதுவரை இருந்த வாழ்வு இனியாவது முடிவுக்கு வரவேண்டும். எங்களை நிம்மதியாக வாழ விடவேண்டும் என்று ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறை மீண்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்து தங்களின் குடும்பத்தினருடன் இணைந்தவர்களை, குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் நேற்று நேரில் சந்தித்தார். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்ததாக கோமகன் வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை- விடுதலை பெற்று வந்துள்ள முருகன், "எனது மனைவி நளினி ஒரு இந்திய பிரஜை என்பதால், தமிழகத்தில் உள்ளார். சிறையில் பிறந்த எனது ஒரே மகள் புலம்பெயர்ந்து பிரிட்டனில் வாழ்கின்றார். இலங்கைக்கு அனுப்பப்பட்ட நான் என் தாயாருடன் வாழ்கின்றேன். எனது விடுதலை சாத்தியமாவதற்கு உந்து சக்திகளாக இருந்து துணைபுரிந்தவர்கள், எனது மனைவி பிள்ளையுடன் சேர்ந்துவாழும் நிலையை எனக்கு ஏற்படுத்தித் தரவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்

தமது விடுதலைக்காகப் பல்வேறு வழிவகைகளிலும் போராடிய உலகவாழ் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் தமது வாழ்நாள் நன்றிகளை காணிக்கை செய்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# யாழில் நேற்று அநுர சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

நவம்பர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அநுரகுமார திஸாநாயக்க நேற்று யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல தரப்பினருடனும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டணி இன்று வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது. இந்தக் கூட்டணியில் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட பல கட்சிகள் இணைந்துள்ளன.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியும் இம்முறை பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தெற்கில் பொதுவான நிலைப்பாடுகளுடன் இருக்கும் கட்சிகளுடன் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறது.

அதேபோன்று வடக்கில் உள்ள சில கட்சிகளுடனும் அநுரவின் குழு மறைமுக பேச்சுகளில் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை பேசும் கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி பேச்சுகளில் ஈடுபட்டுள்ளதாக யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம)

# பயிரை மேய்ந்த வேலி; மாடு கடத்தியோர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் மாடுகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர், நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவிலிருந்து சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்றில் 8 மாடுகளைக் கடத்தி வந்த நிலையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் பொலிஸ் அதிரடிப் படையினர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வாகனத்தை வழிமறித்து சோதனையிட்டபோது, வாகனத்தினுள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் மாடுகள் காணப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து வாகனத்திலிருந்த மூவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, அதில் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர் எனத் தெரியவந்துள்ளது. மூவரையும் கைது செய்த அதிரடிப் படையினர், மாடுகள் மற்றும் வாகனத்தையும் மீட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஒ-20.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதலுக்குச் சென்ற

# வன்முறைக் குழு மடக்கிப் பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். ஊர்காவற்றுறைப் பகுதியில் இளைஞன் ஒருவரைத் தாக்குவதற்குச் சென்ற வன்முறைக் கும்பல் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

பாடசாலையொன்றின் மாணவர்கள் 'வாட்ஸ்அப்' குழுவில் செயற்பட்டுவந்துள்ளனர். அந்தக் குழுவில் இடம்பெற்ற உரையாடலின்போது ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்தே இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளது. தாக்குதலுக்காகச் சென்றவர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அவர்கள் அனைவரையும் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

(ம-66-20)

# கொடியேற்றம்

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் மறுநாள் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு சித்திராப் பௌர்ணமியன்று தீர்த்தத் திருவிழாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-17)

# சாந்தனின் நினைவுடன் நிகழ் நாள்

மறைந்த சாந்தனின் நினைவுடன் நிகழ் நாள் நிகழ்வு போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சாந்தன் எழுதிய நூல்களின் நோக்கும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 5

அரச கரும மொழிக்கொள்கை மற்றும் இனங்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஓரங்க தொலைக்காட்சி நாடகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்காக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் , மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி போன்ற அமைச்சுகளால், கலைத்துறைப்படைப்பாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னரும், ஆக்கங்களை ஜூன் 25 ஆம் திகதிக்கு முன்னரும் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கங்கள் 20 நிமிடங்கள் ஒளிபரப்பக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்களை தத்தமது மாவட்ட மற்றும் பிரதேச செயலக கலாசார பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)

# வடமராட்சியில் விபத்து: நபரொருவர் படுகாயம்!




யாழ்ப்பாணம், ஏப். 5

வடமராட்சி, வல்லைப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் படுகாயமடைந்தார்.

வாகனமொன்றும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. படுயாங்களுக்கு உள்ளான நபர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ம-100)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

**வைரமுத்து சந்திரராஜ்**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

அவர்கள் நேற்று (04.04.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆறாத்துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**கனகராசா குடும்பம்.**

# மரண அறிவித்தல்

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்
யோவான் 11:25

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 . 05 . 1942 | 04 . 04 . 2024 |



**யேசுராணி வேதநாயகம்**

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், இல.35, மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுராணி வேதநாயகம் அவர்கள் நேற்று (04.04.2024) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேல் உடையார் - பூரணம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஜோதிநட்சத்திரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேதநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், மகாராணி, கமலராணி (கொலன்ட்), ரவீந்திரகுமார், பரிமளராணி (நோர்வே), சுரேந்திரகுமார், மகாராஜா (போதகர், சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்), சுதாஜினி (லண்டன்), ஜெறோம் மதிவதனன் (லண்டன்), சுமணன் (போதகர், சீலோவாம் தேவாலயம், நாவற்குழி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரதன், மஞ்சுளா, சிறிதரன், கொலஸ்ரீனா, மேரியா, பாலசந்திரன், கார்த்திகா மற்றும் ஷோபிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.கஜரூபன், தர்ஷனா, நயோமி, மல்க்கம், ஈனோக், வட்சன், பிறைனர், மிஷேல், பென்ஹனன், ஷமீரா, கெவின், கெஷான், ஸ்மித், ஸ்ரைபான், ஷேன், எவன்ஸ், எடின், டெபி, டெமி, டிஷா, ஓபேட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எல்ஷனன், எலன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ரவி: 077 315 9504**
**சுரேஸ்: 077 670 1699**
**மகாராஜா: 077 654 4530**
**சுமணன்: .077 979 9116**

(CS 00123) S-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 31 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் கடந்த 24.02.2024 ஆம் திகதி நடைபெற்றன. அதில் கீழ் காண் விபரப்படியான கிளைகளின் கிளைக்குழுக் கூட்டங்கள் நடைபெறாத காரணத்தால் மீளவும் 07.04.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் அட்டவணையின் படி கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே குறித்த கிளைகளின் அங்கத்தவர்கள் குறித்த நேரத்திற்கு கிளைகளிற்கு சமுகமளித்து கிளைக்குழுக் கூட்டத்தினை நடாத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கூட்ட அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் உரிய கிளையின் தவிசாளருடன் தொடர்புகொண்டு தங்களை உறுதிப்படுத்திக்கொண்டு கூட்டத்தில் பங்குபற்றிக்கொள்ளலாம்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**
**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**
**07.04.2024 ஞாயிற்றுக்கிழமை**

| இலக்கம் | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | 03சி | முஸ்லிம் தெரு | அறிவொளி சனசமூக நிலையம், ஆறுகால் மடம் |
| 2 | 04 | ஓட்டுமடம் | கலைவாணி சனசமூக நிலையம், ஓட்டுமடம் வீதி. |
| 3 | 05 | வண்ணார்பண்ணை | வள்ளுவர் சனசமூக நிலையம், பத்திரகாளி கோவில் வீதி, வண்வட மேற்கு |
| 4 | 10 | யாழ்பாடி | விநாயகர் மண்டபம் (ரசிக ரஞ்சன சபா மண்டபம்) பொருமாள் கோவிலடி. |
| 5 | 11 | நல்லூர் வடக்கு | வன்னியசிங்கம் படிப்பகம், கல்வியன்காடு |
| 6 | 13 | கைலாசபிள்ளையார் | நல்லூர் முருகன் சனசமூக நிலையம் |
| 7 | 14 | ஆனைப்பந்தி | நாவலர் கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, |
| 8 | 15 | ஆரியகுளம் | முற்போக்கு வாலிபர் கழகம் ஆரியகுளம் சந்தி |
| 9 | 16 | நீராவியடி | சைவபரிபாலன சபை, நீராவியடி |
| 10 | 17 | புங்கன்குளம் | அரியாலை சனசமூக நிலையம், அரியாலை |
| 11 | 19 | அரியாலை மத்தி | 19 ம் கிளைக் கட்டடம், |
| 12 | 20 | அரியாலை | 20 ம் கிளைக் கட்டடம், |
| 13 | 21 | கொழும்புத்துறை கிழக்கு | 21 ம் கிளைக் கட்டடம் |
| 14 | 22 | கொழும்புத்துறை மத்தி | 22 ம் கிளைக் கட்டடம் |
| 15 | 24 | கொய்யாத் தோட்டம் | 24 ம் கிளைக் கட்டடம் |
| 16 | 28 | ஸ்ரேசன் | யாழ் புனித மரியாள் மகா வித்தியாலயம் |
| 17 | 35 | சின்னக்கடை | புனித யாகப்பர் ஆலையம், குருநகர். |

**செயலாளர்,**
**யாழ். ப.நோ.கூ.சங்கம் (வ - து)**

(cr.42153) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயிலுமில்ல...

முழங்காவில் துயிலுமில்லத்தின் வளைவை அகற்றக்கோரி, முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பூநகரி பிரதேசசபையின் செயலர் இ.தயாபரன் நேற்று வழக்குக்காக முன்னிலையாகினார். அவருக்காக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற வலயத்தில் உள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் நீதிமன்றில் தோன்றினார்கள்.

"முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் அகற்றப்பட முடியாததொன்று. இந்தத் துயிலுமில்லத்தின் வளைவு மக்களின் உணர்வுடன் தொடர்புபட்ட விடயம். இன்று கிளிநொச்சியில் பல இடங்களிலும் கிளிநொச்சி மத்திய பகுதியிலும்கூட போர் வெற்றி நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில் முழங்காவில் மாவீரர் இல்லத்தின் வளைவை அகற்றுவதற்காக எடுக்கப்படும் முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது? ஏன் முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தின் வளைவை மாத்திரம் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்று சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் மன்றுரைத்தனர்.

இதையடுத்து, "குறித்த மாவீரர் துயிலுமில்லத்தின் ஊடாக பலநூறு மாணவர்கள் தினம்தினம் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். பொதுமக்களும் அந்தப் பகுதியூடாகப் போக்குவரத்துக்களை மேற்கொள்கின்றனர். அவர்களுக்கு இந்தத் துயிலுமில்ல வளைவு ஆபத்தை ஏற்படுத்தலாம். துயிலுமில்லத்தில் இறுதியாக மாவீரர் தின நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டபோதும்கூட துயிலுமில்ல வளைவு அகற்றப்படவேண்டும் என்ற விடயம் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. அஞ்சலிப்பு முடிவடைந்ததும் எல்லாப்பொருள்களையும் அகற்றிவிட்டதாகவே அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். எனினும் வளைவு அகற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே தற்போது அந்த வளைவை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று பொலிஸார் நீதிமன்றில் தங்களின் சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

இதற்கு, "மாவீரர் துயிலுமில்ல வளைவு பொதுமக்களுக்கு ஆபத்தானதாகவோ அல்லது ஆபத்தான பகுதியிலோ அமையப்பெறவில்லை. வீதியில் இருந்து 55 அடிகளுக்கு அப்பால்தான், நிர்ணயிக்கப்பட்ட அளவுவிதிகளை மீறாத வகையில் அந்த வளைவு அமைந்துள்ளது என்றும் அந்த வளைவு ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இல்லை எனவும் எமது தொழில்நுட்பக் குழு உறுதிப்படுத்தியுள்ளது என்று பூநகரி பிரதேசசபையின் செயலர் இ. தயாபரனும் அவர் சார்பிலான தரப்புச் சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்ததுடன், தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையையும் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் மே 16ஆம் திகதி பூநகரி பிரதேசசபையின் செயலர் இ.தயாபரனிடம் விரிவான வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யுமாறும், விடயம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு அவரது பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றும் நீதிபதி தெரிவித்தார். (அ-ம)

## தமிழரசுக்...

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், இடைக்காலக் கட்டாணை வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ச.குகதாசன், சீ.யோகேஸ்வரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, புவிதரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கில் வழங்கப்பட்ட கட்டாணையை நீடிக்கவேண்டுமென வழக்காளி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி கே.வி.தவராசா, இது சாதாரண எல்லை, காணிப் பங்கீட்டு வழக்கல்ல. ஓர் இனத்துடன் தொடர்புடைய, பாரம்பரிய கட்சியுடன் தொடர்புடைய வழக்கு. இந்த வழக்கைத் தொடர்ந்து நீடிக்கவோ, தொடர்ந்து நடத்தவோ நாம் தயாரில்லை. இதனால் இனநலனின் அடிப்படையில் வழக்கை முடித்து, கட்சியை இயங்கச் செய்வதற்காக சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யவும் தயாராக இருக்கிறோம். வழக்காளிகள் கோரும் நிவாரணங்களை வழங்க நாம் தயாராக இருக்கிறோம். தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டி நடந்ததாலேயே இந்த நிலைமை வந்தது. சிறீதரன் வெற்றி பெற்றிருக்காவிட்டால் இந்த வழக்கே வந்திருக்காது. ஆனால் சிறீதரன் பெரும்பான்மையான வாக்குகளால் வென்றார். அவர் அந்த வெற்றியையும் துறந்து, கட்சியை மீள இயங்கச் செய்ய விரும்புகிறார். அதனால் தலைவர் தெரிவையும் மீள நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று மன்றுரைத்தார்.

மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளான ப.சத்தியலிங்கம் மற்றும் எக்ஸ். குலநாயகம் ஆகியோர் ஏனைய பிரதிவாதிகளின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போவதாக மன்றில் தெரிவித்தனர்.

வழக்கிலுள்ள ஏழு பிரதிவாதிகளில் ஒருவரான சுமந்திரன் இறுதியாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் முன்னிலையாகவும் இல்லை. எனவே, அவரது நிலைப்பாட்டை அறிய ஏப்ரல் 5ஆம் திகதி வரை (இன்றுவரை) வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்படுகின்றது.

சுமந்திரனும் ஏனைய எதிராளிகளின் கருத்தோடு இசைவதாக மன்றில் தெரிவித்தால் வழக்கு இன்றுடன் சுமுகமாக முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் வவுனியாவில் நடந்த கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில், "வழக்கை வெல்வதற்கான வாய்ப்புகள் இருந்தும் அதனைக் கட்சியினர் கோட்டைவிட்டுவிட்டனர். இதனால் நான் ஒரு சமர்ப்பணத்தை நீதிமன்றில் முன்வைப்பேன். ஆனால் அது எப்படியான சமர்ப்பணம் என்று இப்போது சொல்லமாட்டேன்" என்ற சாரப்பட சுமந்திரன் தெரிவித்திருந்தார். இதனால் இன்றைய வழக்கு விசாரணையில் எவ்விதமான சமர்ப்பணத்தை முன்வைக்கப்போகிறார்? இதனால் வழக்கு மேலும் இழுபறியாகுமா? அல்லது வழக்கு தள்ளுபடி செய்யப்படுமா? என்று தமிழரசுக் கட்சியினரிடையே பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (அ-ம-26)

## புதைகுழி...

முல்லைத்தீவு, கொக்குதொடுவாய் பகுதியில் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி அடையாளப்படுத்தப்பட்ட மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில், முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கணேஸ்வரன் மற்றும் காணாமற்போனோர் அலுவலகம் சார்பாக சட்டத்தரணி துஷ்யந்தினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது, அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள இன்னமும் நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் தற்போது அகழ்வுப் பணிகளுக்காகப் போடப்பட்டுள்ள பாதீடு அதிகமாக உள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது என முல்லைத்தீவு மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம் நீதிமன்றில் தெரிவித்தார். பாதீட்டை மறுஆய்வுக்கு உட்படுத்தி அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மன்றுரைத்தார். இதையடுத்தே வழக்கு விசாரணை மே மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ-ம-19)

## சு.க.வின்...

வழக்கில், மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 18ஆம் திகதிவரை சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தொடர்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு நேற்றையதினம் கட்டாணை பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து, கட்சியில் இருந்து மைத்திரியால் விலக்கப்பட்ட சு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த திஸாநாயக்க, அமைச்சரான மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சரான லசந்த அழகிய வன்ன ஆகியோர் புதிய பாதையில் சுதந்திரக் கட்சி பயணிக்கவுள்ளது என்று அறிவித்துள்ளனர்.

இதனால் சந்திரிகா மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைவராக வருவதற்குரிய காய்களை நகர்த்தி வருகின்றார் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ-ம)

## நித்திரைக்குச்...

இருப்பது கண்டறியப்பட்டு, உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மனித...

இலங்கை ஆசிரியர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டுக்கு இணங்கவே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-66-27)

## பிள்ளையார்...

பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு புத்தர் சிலை வைக்கப்படவுள்ளதாகவும், விகாரை அமைப்பதை எதிர்காலத்திட்டமாகக் கொண்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலயமானது கி.பி. 1650 ஆம் ஆண்டளவில் பெரியராசகோன் முதலியார் என்பவரால் திருகோணமலை - மடத்தடிப் பகுதியில் அவருக்குச் சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டது. 1958 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த பகுதியை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். தற்போது 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கோவிலுக்குச் சொந்தமான இரண்டு ஏக்கருக்கும் அதிகமான பகுதியை ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-50)

## கத்திக்குத்தில்...

சவரிமுத்து ஜோன்பற்றிக் (வயது-31) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

பாடசாலையொன்றில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியில் ஏற்பட்ட கைகலப்பு கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளது என்று தருமபுரம் பொலிஸார் தங்களின் முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ-ம-113)

## இந்திய...

5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. படகைச் செலுத்திய நபருக்கு ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-27-26)

## விசாரணை...

மீதான வழக்கின் விசாரணைக்காக முன்னிலையாகுமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-6)

## அனலைதீவில்...

வுள்ளது. இந்தக் காற்றாலைக்கான பூமி பூஜையே நேற்று இடம்பெற்றது.


(அ-ம-13)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள P.P.T எனும் நிறுவனத்திற்கு.
வேலைக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 386 6250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 01 . 08 . 1948

மறைவு 08 . 03 . 2024

கடந்த 08.03.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் தெய்வத்திரு

### சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

**திதி: அபரபக்க திரயோதசி**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.04.2024) வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளைமறுதினம் (07.04.2024) ஞாயிற்றுக் கிழமை பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.78.வைத்தியசாலை வீதி,
மூழங்காவில்.

(CS/54825) J-1

குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 . 06 . 1948

உதிர்வு 28 . 03 . 2022

அமரர் **சண்முகநாதன் சிவராசா** (சிவதாஸ்)

**திதி: 05.04.2024**


அப்பாவை இழந்து ஆண்டுகள் இரண்டு
சென்றாலும் கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.
எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் பல ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம் ஆனால்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
நம்மை விட்டு அகலாது அப்பா
நல்லூரான் காலடியில் நிம்மதியாய்
உறங்குங்கள் அப்பா.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

50/19, செட்டித் தெரு,
நல்லூர்.

(CS/28364) J-1

குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னத்தம்பி கந்தசாமி

(தொழிலதிபர்)

(ஸ்தாபகர் ஸ்ரீஐங்கரன் வெதுப்பகம் & ஸ்ரோஸ் ஸ்ரீஐங்கரன் மணிமண்டபம் - டச்சு வீதி, சாவகச்சேரி, முன்னாள் கிளை முகாமையாளர் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், முன்னாள் பொருளாளர் கிராம்புவில் படையாண்டான் தோட்டம், முருகன் கோவில், சாவகச்சேரி வடக்கு)

**திதி : அபரபக்க துவாதசி**

ஆண்டவன் திருவடியில் அமைதியும் கொண்டீரோ
மாண்புடனே எமையிந்த மண்ணுலகில் வளர்த்தீர்
மீண்டொருகால் வந்தெமக்கு மிகுமகிழ்வு தாரீரோ ஆண்டொன்று
போனதையா அழகுமுகம் நாம்கண்டு
ஐங்கரன் மண்டபமும் அருகமைத்த வெதுப்பகமும்
இங்கெமை வாழவைக்கும் என்னாளும் எமைக்காக்கும்
சங்கடங்கள் சூழாமல் சகமதில் எமைக்காத்தீர்
இங்கிருந்து வாடுகிறோம் என்றினி உமைக்காண்போம்
உம்பணியை நாம்தொடர்வோம் உலகிலே நாளும்
எம்பணிகள் சிறந்திடவே எமக்காசி தந்திடுவீர்
இம்மண்ணில் நாங்களும் இருக்கின்ற நாள்வரை
உம்நினைவு சுமந்தபடி உமையெண்ணி வாழ்வோமே.

(CR/41997) J-1

1ஆம் கட்டை வீதி, மருதடி மேற்கு,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.